

St. Joseph Cafasso
May 18

## *புனித ஜோசப் (Cafasso) (1811 – 1860)*

இவர் இளவயதில் "சிறு புனிதர்" என்று அழைக்கப்பட்டார். இவர் ஏழை, திறமை படைத்தவர். ஆர்வத்துடன் உழைப்பவர். பக்தியுள்ளவர். குருப்பட்டம் பெற்றார். பேராசிரியராகவும், குருமடத்தின் தலைவராகவும் செயலாற்றினார். இவரை "இத்தாலி குருக்களிடையே முத்து" என்பார்கள். இவர் டூரின் நகர்க் குருக்களுக்கும் மக்களுக்கும் பெருத்த ஆசீர்வாதத்தின் ஊற்றாக விளங்கினார். இவர் புனித ஜான் போஸ்கோவின் ஆன்மகுரு. குருக்கள், ஆயர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் இவரிடம் பாவசங்கீர்த்தனம் செய்து, எண்ண முடியாத ஆன்ம நலன்களை அடைந்தனர். 'குருக்கள் இவரிடமிருந்து அநேக காரியங்களைக் கற்க வேண்டும். சலிப்பின்றி இவரைப்போல் விழிப்பாயிருக்க வேண்டும். பொறுமையும் அன்பும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அனைத்துக்கும் மேலாக இவரைப்போல் செபத்தை நேசிக்க வேண்டும். கடவுள் ஆசீர்வதித்தால் ஒழிய நமது முயற்சிகள் அனைத்தும் வீண். குருக்களை உருவாக்கி அர்ச்சிக்கும் மிக முக்கியமான வெகுபயனுள்ள வேலையை செய்து முடிக்க கடவுளே நம் புனிதரை அனுப்பினார். இவரால் அநேகர் புனித வாழ்வு நடத்த, திருச்சபைக்கு கீழ்ப்படிந்து நடக்க, தம் கடமைகளை பிரமாணிக்கத்துடன் செய்ய உதவி பெற்றனர்' என்று பதினோராம் பத்திநாதர் பாப்பானவர். இவரை பற்றி கூறினார்.

**சிந்தனை:**

உயிரோடிருக்கும்வரை நம்மால் இயன்ற அளவு ஏராளமாக நன்மை செய்வோம். கடமையைச் செய்வதுடன் நாம் திருப்தி அடையலாகாது.

**செபம்:**

ஆண்டவரே, திருச்சபைக்கு ஆர்வம் நிறைந்த ஆயர்களையும், குருக்களையும் தாரும்.




©2003 Mario D. Macari - Distributed exclusively by Catholic Online - www.catholic.org